**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-7/Lw-15 |
| Name | : | Mrs. Arulmozhi |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 1.8.2022 ஆம் தேதி இரவு 10.20 மணிக்கு திருப்பூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பரிவில் பணியில் இருந்த போது, ஆனந்த் என்பவரை தனியார் ஆம்புலன்ஸில் சுரேஷ் என்பவர் அழைத்து வந்தார். ஆனந்த் என்பவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்தேன். அந்த சமயத்தில் அவர் மது போதையில் இருந்ததால் சம்பவத்தை பற்றி சுரேஷ் என்பவர் விளக்கிக் கூறினார்.

சுரேஷ் அந்த சமயத்தில் ஆனந்த் என்பவரை நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் 8 மணியளவில் தாக்கியதாக கூறினார்.

2. அப்போது சுரேஷ் 1.8.2022–ஆம் தேதி சாந்தி பஸ் தியேட்டர் முன்பு அருவாளால் ஆனந்த் தாக்கப்பட்டதாக கூறினார். சம்பவத்தினால் அவருக்கு இடது பக்க முன் கையில் 10*6*5 அளவில் ஆழமானவெட்டு காயம் இருந்தது. அந்த காயத்தினால் ஆனந்த் வலது கையில் எலும்பு தெரியும்படி இருந்தது. இடது முழங்கையில் அவருக்கு 7*3*3 அளவில் வெட்டுக்காயம் இருந்தது. இடது முன்கையில் இரண்டு வெட்டுகாயம் இருந்தது 4*1*1 அளவில் இருந்தது. இடது மணிகட்டில் வெட்டுகாயம் 3*1*1 அளவில் இருந்தது. பின்மண்டையில் நடுபகுதியில் அழமான வெட்டுகாயம் 6*1*1 அளவில் இருந்தது. புறமுதுகில் லேசான வெட்டுகாயங்கள். வலது கையில் வெட்டுகாயம் 2*1*1 செ.மீ அளவில் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை கருத்தில் கொண்டு மேல் சிகிச்சைக்காக அவரை கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

3. அவர் அங்கு மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஆனந்த் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது எங்களால் கொடுக்கப்பட்ட ஏ.ஆர் என்ட்ரி. அது அ.சா.ஆ**–5.** அதன்பிறகு கோவை மருத்துவமனைக்கு சிகிச்சை ஆவணங்கள் மற்றும் எங்கள் மருத்துவமனை ஆவணங்களின் அடிப்படையில் ஆனந்த் என்பவருக்கு காயச்சான்று வழங்கினேன். காயச்சான்று அ.சா.ஆ**–6**. ஆனந்த் என்பவருக்கு ஏற்பட்ட 1 மற்றும் 6 வது காயம் கொடுங்காயமாகும். இதை பொறுத்து புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் விசாரணையில் ஆனந்த் என்பவர் உடன் சுரேஷ் வந்திருந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் அதைப் பற்றி என்னிடம் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணையில் சம்பவத் தேதியில் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் தாக்கியதாக ஆனந்த் சொன்னதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் அதைப்பற்றி என்னிடம் விசாரணையே நடைபெறவில்லை. ஆனந்த் குடிபோதையில் சென்று கூர்மையான கற்கள் மற்றும் பள்ளம் நிறைந்த பகுதியில் விழுந்தால் மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரி. சிகிச்சையின் போது ஆனந்த் நல்ல நிலையில் இருந்தால் அவர் குடிபோதையில்

இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தவறான சான்றிதழ் கொடுத்து கொடுங்காயம் ஏற்பட்டதாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.10.16 17:30:43 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

Case No. S.C. 128/2023

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-8/Lw-17 |
| Name | : | Mrs. Vanaja |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் திருப்பூர் வடக்கு காவல் நிலைய குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 1.8.2022-ஆம் தேதி நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த சமயத்தில் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று, திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆனந்த் என்பவரை விசாரணை மேற்கொண்டேன். விசாரணையின் போது ஆனந்த் சொன்ன சங்கதிகளை வாக்குமூலமாக பதிவு

செய்தேன். அதன் பிறகு விசாரணை மேற்கொண்டேன். சம்பவம் நடந்தது விசாரணையின் மூலம் உண்மை என்று தெரிய வந்ததால் திருப்பூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண் 890/2022 எதிரிகள் பாலமுருகன், விக்கி, மணிகண்டன், காளிதாஸ், முனியாண்டி செல்வம், கண்ணன் ஆகியோர் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 447, 294 பி, 323, 324 மற்றும் 307 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் தான் அன்றைய தேதியில் நான் பதிவு செய்தது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–7. தற்போது காண்பிக்கப்படும் அசல் முதல் தகவல் அறிக்கை தான் என்னால் தயார் செய்யப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–8. முதல் தகவல் அறிக்கையை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரி விசாரணைக்காக ஒப்படைத்தேன். போலீசார் இதை பொறுத்து என்னை விசாரித்தார்கள் .

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. முதல் தகவல் அறிக்கையில் எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது என்ற விவரம் இல்லை என்றால் ஆமாம். அந்த சமயத்தில் புகார்தாரரை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்ற விவரத்தையும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரி. புகார் வாக்குமூலம் பெறுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் அனுமதி பெற்றேன் என்றால் சரி. புகார்தாரர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சமயத்தில் மது போதையில் இருந்தார் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். அவ்வாறு சொன்னார்கள். அந்த சமயத்தில் மயக்கமாக அவர் இருந்தார். குடிபோதையில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது.

2. புகாரியில் சொல்லப்பட்டுள்ளவாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகாரியில் சொல்லப்பட்டுள்ளவாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆனந்த் குடிபோதையில் சம்பவத் தேதியில் போய் எழுந்து ஏற்பட்ட காயத்தை பொய்யாக வேறு ஒரு சம்பவம் நடந்ததாக என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.16 17:30:49 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.